பவுண்டன் பேனா நிப்பிற்கு விற்பனை வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல்.

*வினா எண் 4: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் பவுண்டன் பேனா உற்பத்தியாளர்கள் தயார் செய்யும் பேனா நிப்பிற்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது முதல் நடைமுறைக்குவரும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (ஆ) சாத்தூர் (கையினால் தயாரிக்கப்பட்ட) பவுண்டன் பேனா நிப் உற்பத்தியாளர்கள் தங்கள் விண்ணப்பத்தில் ஸ்டெயின் லெஸ் ஸ்டீலினால் தயார் செய்யப்படும் இரிடியம் பொருத்தப்படாத மற்றும் முலாம் பூசப்பெறாத பவுண்டன் பேனா நிப்புகளுக்கு ஒரு முனை விற்பனை வரியை நீக்கி பல முனை விற்பனை வரி விதிப்பதற்கு கொண்டு வரக் கோரியுள்ளனர். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, இந்த பேனா நிப்புக்கு ஒருமுறை வரி தற்போது வசூல் செய்யப்படுகிறது. சாத்தூர் பவுண்டன் பேனா நிப் உப்பத்தியாளர்கள் பலமுனை வரி விதிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். பலமுனை வரி விதித்தாலும் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வரிப்பளு ஏற்படுகிறது. ஆகவே, மொத்தமாக வரி விலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மொத்த வரி விலக்கு அளித்தால் ஏறத்தாழ 96,000 ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, சாத்தூர் பவுண்டன் பேனா உற்பத்தியாளர்கள் இதுவரை விற்பனை வரியாக எவ்வளவு கட்டியுள்ளார்கள்? புதிதாக இம்மாதிரியான தொழிற்சாலைகளை நடத்த, தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிப்பு தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பதில் கைவசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த பவுண்டன் பேனா நிப்பு செய்யும் வேலையை சாத்தூரில் ஒரு குடிசைத் தொழிலாக, 5 பேர், 10 பேர் சேர்ந்து வீடுகளில் வைத்துச் செய்கிறார்கள். இது நம்முடைய மாநிலம் தவிர வெளி மாநிலங்களுக்கு, கல்கத்தா போன்ற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளி மாநிலத்தவர்களும் இதை வாங்குகிறார்கள். வரி போடுவதன் காரணமாக விலை கூடும். அதனால் தொழில் பாதிக்கும். இது ஒரு குடிசைத் தொழிலாக இருப்பதால்—95,000 ரூபாய்தான் வருமானம் என்று சொல்கிறார்கள்—முழுவதுமாக வரி விலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே அரசு ஆலோசிக்கும்.

தமிழக அரசின் முத்திரைச் சின்னம்

* வினா எண் 5: திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு முத்திரைச் சின்னம் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுர வடிவமைப்பைக் கொண்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில்; இது குறித்து கோபுரத்தின் அருகே கல்வெட்டு ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : (அ) தமிழக அரசு முத்திரைச் சின்னம் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரத்தின் சாயலைக் கொண்டுள்ளதே தவிர, மேற்கொண்ட கோயில் கோபுர வடிவத்தை கொண்டு தமிழக அரசின் முத்திரைச் சின்னம் ஏற்படுத்தப்படவில்லை.

(ஆ) எனவே அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ஆண்டாள் கோயில் கோபுரத்தை மாடலாகக் கொண்டதாக இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் எந்த கோபுரத்தை மாடலாகக் கொண்டது? இதே சட்டமன்றத்தில் கேள்வி கேட்கும்போது மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் இந்த கோயிலை மாடலாகக் கொண்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாறுபட்ட கருத்து வந்திருக்கிறது. இது பற்றி விளக்குவார்களா?